RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 189 ஜூலை.15 2026 புதன்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# ரூ.139 கோடி மதிப்பில் புதிய மருத்துவ கட்டிடங்கள் முதல்வர் விஜய் திறந்து வைப்பு

சென்னை: ஜூலை.15-

"நலம் TN" என்ற தமிழ்நாடு சுகாதார அறக்கட்டளை இணையதளத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்து ரூ.139.47 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிடங்கள் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்களை பயன்பாட்டிற்குக் கொண்டு வந்ததார். மேலும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 751 உதவி மருத்துவர்கள் மற்றும் 1,393 சுகாதார ஆய்வாளர்கள் (நிலை II) ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சுகாதார அறக்கட்டளை வழியாக அரசு மருத்துவமனை மேம்பாட்டிற்கு அறக்கட்டளை மற்றும் சமூகப் பொறுப்பு நிதி வழங்கும் வகையில் "நலம் TN" என்ற புதிய இணையதளத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்.

மேலும், 139 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிடங்களைத் திறந்து வைத்து, நவீன மருத்துவ உபகரணங்களின் பயன்பாட்டினையும் தொடங்கி வைத்து, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 751 உதவி மருத்துவர்கள் மற்றும் 1,393 சுகாதார ஆய்வாளர்கள் (நிலை II) ஆகியோருக்குப் பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

மேலும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 751 உதவி மருத்துவர்கள் மற்றும் 1,393 சுகாதார ஆய்வாளர்கள் (நிலை II) ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

"நலம் TN" இணையதளம்: தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உயர் சிறப்பு சிகிச்சைகள் வழங்குதற்காக, உள்கட்டமைப்பு மற்றும் உயர்தர மருத்துவ உபகரணங்களை மேம்படுத்தும் நோக்கில், பெரிய தொழில் நிறுவனங்கள், பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி (CSR) மற்றும்



தொண்டு நிறுவனங்கள், முன்னாள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், தனிப்பட்ட நன்கொடையாளர்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடை பெற்று வெளிப்படையான, பொறுப்புணர்வுடன் கூடிய முறையில் செயல்படுத்தும் பொருட்டே "நலம் TN" இணையதளம் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கட்டமைப்பின்கீழ் உருவாக்கப்பட்டு, அதற்கான இணையதளமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளம் மூலம் நன்கொடையாளர்கள் தங்களது பங்களிப்பை எளிமையான முறையில் நேரடியாகவும், பாதுகாப்பாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் வழங்க முடியும்.

தமிழ்நாட்டில் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்திடும் வகையில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின்கீழ் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொது மருத்துவப் பிரிவுக் கட்டிடத்தின் இரண்டாம் தளத்திற்கு மேல் 17 கோடி ரூபாய் செலவில் 30 படுக்கை வசதிகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு, 180 படுக்கை வசதிகளுடன் கூடிய பொது மருத்துவ வார்டுகள், செவிலியர் நிலையங்கள், மருத்துவர் அறைகள், பரிசோதனை அறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள நான்கு தளங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

இதேபோல், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கத்தின் சார்பில் ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் 57 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிடம்; புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும், வத்தலகுண்டு அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும், பட்டிவீரன்பட்டி அரசு மருத்துவமனையில் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவிலும், விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை முதல்வர் விஜய் திறந்துவைத்தார்.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககத்தின் சார்பில் பல்வேறு மாவட்டங்களில் 45 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 78 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் சேவை கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நவீன மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டுக்காக முதல்வர் விஜய் தொடங்கிவைத்தார். கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவக் கட்டடங்கள் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்களின் மொத்த மதிப்பு 139 கோடியே 47 லட்சம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய வரலாற்றை படைத்திட பலம் பெறுவோம் தென்காசி அகழாய்வு குறித்து மு.க.ஸ்டாலின் கருத்து





சென்னை: ஜூலை.15-

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றினைத் தெற்கில் இருந்து தொடங்கி எழுதுவோம், வரலாற்றில் பெருமிதம் கொள்வதோடு, புதிய வரலாற்றைப் படைத்திடவும் பலம் பெறுவோம் என்று முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "திமுக அரசு தொடங்கிய அகழாய்வுப் பணிகளைப் புதிய அரசும் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழர் வரலாற்றுத் தடங்களை உலகறியச் செய்ய வேண்டும்.

தமிழரின் வரலாற்றையும் நமது பண்பாட்டையும் குறைத்துக் கூறியும், சிதைத்து எழுதியும் வருவதோடு, வரலாற்றைத் திரிபுவாதங்களால் திசை திருப்பும் சூழ்ச்சிகளும் அரங்கேறும் காலத்தில், தமிழ்த் தொன்மை உண்மைச் சான்றுகளோடு வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுதான் கீழடி, பொருநை, இரும்பின் தொன்மை!

மண்ணுக்குள்ளும் ஆழ்கடலுக்குள்ளும் மறைந்திருக்கும் இன்னும் பல கீழடிகளை மேலே கொண்டு வருவோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றினைத் தெற்கிலிருந்து தொடங்கி எழுதுவோம்! வரலாற்றில் பெருமிதம் கொள்வதோடு, புதிய வரலாற்றைப் படைத்திடவும் பலம் பெறுவோம்!" என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி கிராமத்தில் தமிழக அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட கள ஆய்வு மற்றும் அகழாய்வில், சுமார் 2,500 ஆண்டுகள் பழமையான சங்க காலத்தைச் சேர்ந்த சதுர வடிவ செங்கல் படிக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தமிழக தொல்லியல் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இதன் கள ஆய்வை தொடர்ந்து மேற்கொள்ள தற்போது பொருப்பேற்றுள்ள அரசை மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

## தமிழ்நாடு விழா பேச்சுகட்டுரை போட்டிகள்: மாநில அளவில் முதலிடம் பெறும் மாணவருக்கு ரூ.50 ஆயிரம் பரிசு

சென்னை, ஜூலை.15-

தமிழ்நாடு விழாவை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்படும் மாநில அளவிலான பேச்சு,கட்டுரை போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.50 ஆயிரம், 2ம் இடம் பிடிப்போருக்கு ரூ.30 ஆயிரம், 3ம் இடம் பெறுவோருக்கு ரூ.20 ஆயிரம் பரிசு வழங்கப்படும் என அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பள்ளிக்கல்வி, தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டுள்ள ஓர் அறிவிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்டநாள் தமிழ்நாடு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு தமிழ்வளர்ச்சித் துறை சார்பில், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி,கட்டுரைப் போட்டி நடத்தப்படுகின்றன. இது வெறும் போட்டி மட்டுமல்ல.

நமது தமிழ்மொழியின் பெருமையுடன் தமிழகத்தின் வரலாற்றை பறைசாற்றும் பெரு விழா ஆகும். எனவே, இந்த போட்டிகளில் பள்ளி மாணவமாணவிகள் உற்சாகமாக பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வர வேண்டும் என்பதுதான் என் ஆவல்.

தமிழ்நாடு விழாவை முன்னிட்டு, மாவட்ட அளவில் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.50 ஆயிரம், 2ம் பரிசாக ரூ.30 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.20 ஆயிரம் பரிசும், பாராட்டுச்சான்றிதழும் வழங்கி பெருமைப்படுத்த உள்ளோம்.

ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் தமிழ்வளர்ச்சித் துறை வாயிலாக மாவட்ட அளவிலான போட்டியை ஜூலை 15ம் தேதிக்குள் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களும், பெற்றோரும் மாணவர்களை இந்த போட்டிகளில் உற்சமாகமாக பங்கேற்கச் செய்து தமிழ்நாடு விழாவை ஒரு சரித்திர புரட்சியாக மாற்றிக் காட்ட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "திமுக அதிமுக கூட்டணிக்கு ராஜேந்திர பாலாஜி தான் ஒருங்கிணைப்பாளர்"

### அமைச்சர் நிர்மல்குமார் விமர்சனம்!

சென்னை, ஜூலை.15-

தவெக எம்.எல்.ஏக்களிடம் பேரம் பேசப்பட்ட விவகாரம் தமிழக அரசியல் களத்தில் புயலைக் கிளப்பியுள்ள நிலையில், அதிமுக மற்றும் திமுக ஆகிய இரு கட்சிகளையும் இணைத்து தவெக அமைச்சர் நிர்மல்குமார் செய்துள்ள விமர்சனம் புதிய விவாதத்தைக் கிளப்பியுள்ளது.


செய்தியாளர்களைச் சந்தித்த தவெக அமைச்சர் நிர்மல்குமார், தற்போதைய அரசியல் சூழல் குறித்துப் பேசுகையில் அதிமுகவினரைக் கடுமையாகச் சாடினார். "அதிமுகவினர் என்ன பேசுவது என்றே தெரியாமல் குழப்பத்தில் பேசுகிறார்கள். தற்போதைய சூழலில் திமுக அதிமுக கூட்டணிக்கு முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி தான் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார் போலிருக்கிறது" என நக்கலாக விமர்சித்தார்.

தவெக ஆட்சியைத் தொடக்கத்திலிருந்தே கவிழ்க்க வேண்டும் என்றுதான் திமுக முயன்று வருகிறது. இப்போதும் அதற்கான வேலைகளையே செய்கிறார்கள். எம்.எல்.ஏக்களிடம் குதிரை பேரத்தில் ஈடுபட்டது திமுகதான், தவெக அல்ல. ஆனால், பழி மட்டும் எங்கள் மீது போடப் பார்க்கிறார்கள் என்றார்.

இந்தச் செய்தி சந்திப்பின் போது வழக்கத்திற்கு மாறாக, அரசுத் துறை அதிகாரிகளைத் தனது இருக்கைக்கு அருகிலேயே அமர வைத்துக் கொண்டு அமைச்சர் நிர்மல்குமார் இந்த அரசியல் ரீதியிலான காரசாரமான கேள்விகளுக்குப் பதிலளித்தார். அரசு அதிகாரிகளின் முன்னிலையிலேயே அவர் எதிர்க்கட்சிகளைத் தாக்கிப் பேசியது அரசியல் வட்டாரத்தில் தற்பொழுது விவாதப் பொருளாக மாறியுள்ளது.

## நடுகற்கள் அமைப்பதற்கான பழங்கால பாறை: மதுரை அருகே கண்டறிந்த ஆய்வாளர்கள்





மதுரை, ஜூலை.15-

பழங்காலங்களில் வீரர்களின் நினைவாக வைக்கப்படும் நடுகற்களை அமைப்பதற்கான பழங்கால பாறையை மதுரை அருகே ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

பழங் காலங்களில் போரில் வீர மரணம் எய்திய வீரர்கள், செயற்கரிய செயல்களை செய்த சான்றோர்களின் நினைவாக கல் நட்டு, அதில் அவர் பெயரையும் பெருமைகளையும் செதுக்கி வைப்பது பண்டைய கால வழக்கம்.

இதுதான் 'நடுகல்' என அழைக்கப்படுகிறது. வீரக்கல், கவலையகல், கடவுளெய்திய கல் என இலக்கியங்களில் இவை குறிப்பிடப்படுகின்றன.

குறிப்பாக, 'உழலைக்கல்' என மதுரை தமிழ் அகராதியும், 'நட்ட கல்' என புறநானூறும், 'நடுங்கல்' என சிலப்பதிகாரமும் இந்த நடு கற்களை வெவ்வேறு பெயர்களில் குறிக்கின்றன.

இது போன்ற பல நடுகற்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களர் தமிழகத்தில் பல இடங்களில் கண்டெடுத்து, அதன் வரலாற்றையும், விவரங்களையும் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் பண்டைய கால தமிழர்களின் பண்பாடு, வீரம், நாகரீகம் ஆகியவை உலகுக்கு தெரியவந்துள்ளன.

நடுகல் பாறை கண்டெடுப்பு

இந்நிலையில், பழங்காலத்தில் நடுகற்களை வைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட ஒரு பாறையை ஆய்வாளர்கள் மதுரை அருகே கண்டறிந்துள்ளனர்.

மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா சேடப்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள ப. சங்கரலிங்கபுரம் என்ற ராணுவ நகரில் இருக்கும் ஓணான் கரடு, பெருமாள் மலையில் தான் இந்த பாறை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த சிற்பத்துறை ஆய்வாளர் முனைவர் தேவி அறிவுசெல்வம், சமூக ஆர்வலர்கள் பெத்து முனி, வினோத் ஆகியோருடன் இணைந்து இதனை கண்டறிந்துள்ளார்.

இதுகுறித்து தேவி அறிவுசெல்வம் கூறுகையில், "கிமு 7ஆம் நூற்றாண்டில், அதாவது 2,600 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியத்தில் 'நடுகல்' எவ்வாறு எடுக்கப்பட வேண்டும் என 6 நிலைகளைத் தெரிவிக்கிறது.

'காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல்சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று இருமூன்று மரபில் கல்லொடு புணர' என்கிறது தொல்காப்பியம்.

அதாவது, கல்லை தேர்ந்தெடுத்து நீராட்டி வழிபாடு செய்ததை, இப்பாடல் குறிப்பிடுகிறது. இதனையே காதைகளாக இளங்கோவடிகள் காட்சி காதையில் முதலாவதாக அமைத்தார்.

புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியல் திணையில் கல்காண்டல், கல்கோள் நிலை, கல் நீர்ப்படுத்தல், கல் நடுதல், கல் முறைப்பழிச்சல், இற்கொண்டு புகுதல் என்பன நடுகல் என்று கூறுகிறார்.

கல்காண்டல் என்பது கல்லைக் காணுதல் என்பதைக் குறிக்கிறது. வீரனது உருவம் பொறித்து நடுவதற்கேற்ற கல்லை தேர்வு செய்வது என்பது இதன் பொருள்.

புதிய நடுகல் பாறைகள் கண்டெடுப்பு

இதில் குறிப்பிட்டுள்ளது படி, நடுகல்லிற்காக கல்லை தேர்ந்தெடுப்பதற்கான தடயங்கள் ஓணான் கரடு என்ற மலையில் மூன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் காணப்படுகின்றன.

நடுகல் வைப்பதற்கான பாறையை தேர்ந்தெடுத்த தடயத்தை, இந்த மலையில் இரண்டு இடங்களில் பார்க்க முடிகிறது.

மேலும், இங்கு மூன்று நடு கற்கள் காணப்படுகின்றன. இதன் அருகிலேயே மூன்றடி உயரம் 2 அடி அகலம் கொண்ட பலகைக் கல்லில் ஆண் பெண் சிற்பமானது நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளது.

ஆண் சிற்பத்தின் இடது கையில் கேடயமும், வலது கையில் ஓங்கிய நிலையில் பெரிய வாளும், இறுக்கி கட்டிய இடுப்பு ஆடையில் குறுவாளும் காட்டப்பட்டுள்ளன.

பெண் சிற்பத்தில் இடது பக்க தலையில் கொண்டையும், வலது கையில் குடுவையும் உள்ளன.இடது கையானது சிதைந்த நிலையில் இருப்பதால், அதில் என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை.

மலையின் அடிவாரத்தில் மற்றொரு நடுகல்லும் உள்ளது. இது, மூன்றடி உயரம், 2 அடி அகலம் கொண்ட பலகை கல்லில் நின்ற நிலையில் ஆண் உருவமானது காட்டப்பட்டுள்ளது.

இடது பக்கம் புல்லாங்குழல் வைத்து இசைப்பது போலவும், கால்களின் இரண்டு பக்கங்களில் இரண்டு மாடுகள் பாய்ந்த நிலையிலும், வலது கை மேற்புறத்தில் மற்றொரு மாடும் காட்டப்பட்டுள்ளது

சிற்பத்தின் இடது காலானது, முன்னோக்கி வைத்த நிலையில் இருக்கிறது. இடது பக்கவாட்டுக் கொண்டை போட்டு இடுப்பில் இடை ஆடையுடன் வளரி போன்ற ஆயுதம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் காணப்படும் உருவம் அப்பகுதியின் இனக்குழு தலைவராக இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

மலையடிவாரத்தின் மற்றொரு பகுதியில் ஆண் பெண் அமர்ந்த நிலையில் சதிக்கல் சிற்பம் காணப்படுகிறது.

தலைவன் இறந்தவுடன் மனைவி சதி ஏறியதை தெரிவிக்கும் விதமா, இந்த நடு கல் காட்டப் பட்டுள்ளது. சதியேறியதன் அடையாளமாக பெண்ணின் கையில் மங்கல சின்னமான கண்ணாடியும், வளையல்களும் காட்டப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.



# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுதிறனாளிகள் குறைதீர்க்கும் கூட்டம்

திருவள்ளூர், ஜூலை.15-

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 13.07.2026 பிற்பகல் 2:30 மணியளவில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு அலுவலர் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை யூ டி ஐ டி கார்டு பெறுவதில் உள்ள சிரமங்கள் குறித்து அவற்றை நிவர்த்தி செய்ய மாற்று வழிகள் குறித்தும் மாற்றுத்திறனாளி நல சங்கத்தினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு மாற்றுத்திறனாளி சங்க நிர்வாகிகள் பங்கேற்று தங்களுடைய கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர் சுமார் 50க்கும் மேற்பட்ட பல்வேறு சங்கத்தை சேர்ந்த மாற்றுதிறனாளிகளின் பிரிதிநிதிகள் கலந்து கொண்டனர்



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கிலநடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 525 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 525 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.11,445/ மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள், ரூ.9000/ மதிப்பிலான கம்மோடு வீல் சேர், ரூ.594/ மதிப்பிலான எல்போ ஊன்றுகோல், ரூ.15,750/ மதிப்பிலான சக்கர நாற்காலி என மொத்தம் ரூ.36,789/ மதிப்பிலான உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# தேனி மாவட்டத்தில் மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு

தேனி, ஜூலை.15-.

தேனி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2027ன் முதற்கட்ட பணியாக, பொதுமக்கள் தங்களது வீட்டு கணக்கெடுப்பு விவரங்களை தாங்களே இணையதளம் வாயிலாக பதிவு செய்யும் சுய கணக்கெடுப்பு (Self Enumeration) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சுய கணக்கெடுப்பு பணியானது 17.07.2026 முதல் 31.07.2026 வரை நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, சுய கணக்கெடுப்பு (Self Enumeration) மேற்கொள்வது தொடர்பான அனைத்து துறை அலுவலர்களுக்கு செயல்முறை விளக்கம் தேனி மாவட்ட முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.மேற்படி, கூட்டத்தில் சென்னை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலக துணை இயக்குநர் .வசந்தகுமார் மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2027 தொடர்பான சுய கணக்கெடுப்பு (Self Enumeration) பணிகளை மேற்கொள்ளும் நடைமுறைகள் குறித்து செயல்முறை விளக்கம் கணினி வாயிலாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இதில், அனைத்து அலுவலர்களுக்கும் பொதுமக்கள் தங்களது வீட்டு மற்றும் குடும்ப விவரங்களை இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு துறையின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://se.census.gov.in வாயிலாக சுயமாக பதிவு செய்யும் முறை, தேவையான விவரங்களை உள்ளீடு செய்து பதிவேற்றம் செய்தல், சுய கணக்கெடுப்பு அடையாள எண் (SE-ID) பெறும் நடைமுறை தரவு சரிபார்ப்பு நெறிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு செயல்முறைகள் குறித்து விளக்கப்பட்டது.மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்புகளப்பணிகளுக்காக பயன்படுத்தப்படும் பிலிளி செயலியின் செயல்பாடுகள், கணக்கெடுப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பதிவுகள், தகவல்களை சரிபார்த்து பதிவேற்றம் செய்யும் நடைமுறைகள் மற்றும் பணிகளை முறையாக மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குறித்தும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து, மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2027 தொடர்பான பொதுமக்கள் மற்றும் அலுவலர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு காணும் வகையில் அரசு சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளToll Free உதவி மைய எண் 1855 குறித்தும் தெரிவிக்கப்பட்டு, தேவையான வழிகாட்டுதல்களைப் பெற இவ்வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்மேற்கண்ட செயல்முறை விளக்க பயிற்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .மு.ராமகிருஷ்ணன், செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர் .லெ.பாண்டி,

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027இன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் K.S.லோகநாதன், மக்கள் தொகை கணக்கெடுப்பு பொறுப்பு அலுவலர்கள் (Charge Officers) மற்றும் பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நீலகிரி, ஜூலை.15-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 146 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், இன்றநடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் , உலக மக்கள் தொகை தினம் 2026 ஐ முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற எமரால்டு ஹைட்ஸ் பெண்கள் கல்லூரி மாணவிகள் மற்றும் செவிலியர் பயிற்சி மாணவிகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், உதவி ஆணையர் (கலால்) மாதேஸ்வரன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) புனிதா உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு2027 இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படுவதை முன்னிட்டு, முதல் கட்டமாக வீட்டு பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணிகள் எதிர்வரும் 01.08.2026 முதல் 30.08. 2026 வரை நடைபெற உள்ளது. இதில் வீட்டு பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு 17.07.2026 முதல் 31.07.2026 வரை பொதுமக்கள் அதிகளவில் பங்கு கொள்ளும் விதமாக சுய கணக்கெடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி துவக்க விழாவில், மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு சின்னம், மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான விழிப்புணர்வு குறும்படம், சுய கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் / மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ. (13.07.2026) அன்று வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாபு, தேர்தல் வட்டாட்சியர் திருமலை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை மக்கள் குடும்ப நலத்துறை, மாவட்ட சுகாதார பணிகள் சார்பாக, உலக மக்கள் தொகை தினத்தை (ஜூலை 11) முன்னிட்டு, உலக மக்கள் தொகை தின உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஜீவா நர்சிங் கல்லூரி மாணவிகள் நேற்று (14.07.2026) எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, ஒசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) முருகேசன், (வளர்ச்சி) ராமஜெயம், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், இணை இயக்குநர் (நலப் பணிகள்) மரு.மோகனபானு, துணை இயக்குநர் (குடும்பநலம்) மரு.பாரதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கழிவுநீர் தொட்டியில் ஆண் சிசு சடலமாக மீட்பு

திருப்பூர், ஜூலை.15-

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள கழிவுநீர் தொட்டியில், பிறந்து சில மணி நேரமேயான பச்சிளம் ஆண் சிசு ஒன்று வீசப்பட்டுக் கிடந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திருப்பூரை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி திருப்பூரில் தங்கியுள்ள பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த மக்கள் மற்றும் லட்சக்கணக்கான வடமாநில தொழிலாளர்கள் 90% மேற்பட்டோர் சிகிச்சைகாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை நாடுகின்றனர்.குறிப்பாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள மகப்பேறு சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தினமும் நூறுகணக்கான கர்ப்பிணிகளுக்கு பிரசவம் பார்க்கப்பட்டு வருகிறது.இந்நிலையில் இன்று காலை மகப்பேறு சிகிச்சை பிரிவின் பின்புறம் உள்ள கழிவு நீர் தொட்டியிலிருந்து கடுமையான துர்நாற்றம் வீசியுள்ளது. இதனால் சந்தேகம் அடைந்த மருத்துவமனை ஊழியர்கள் கழிவுநீர் தொட்டியை பார்த போது தொட்டிக்குள் பிறந்து சில மணி நேரமேயான பச்சிளம் ஆண் சிசு ஒன்று கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தவர்கள் இது குறித்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.இதனிடையே கழிவுநீர் தொட்டியில் இருந்து மீட்கப்பட்ட சிசு அந்த மருத்துவமனையில் பிரசவித்த குழந்தையா? அல்லது வெளியிலிருந்து கொண்டு வந்து வீசப்பட்டதா? இந்த கொடூர செயலில் ஈடுபட்டது யார் ? என்று மருத்துவமனையில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்து போலீசார் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்



# நெல்லை அருகே தந்தை, மகன் இரட்டைக் கொலை வழக்கில் மேலும் இருவர் சரண்

நெல்லை, ஜூலை.15-

நெல்லை அருகே தந்தை, மகன் இரட்டைக் கொலை வழக்கில் ஏற்கனவே 14 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இன்று சேரன்மகாதேவி நீதிமன்றத்தில் மூலச்சி பெருமாள் பாண்டியன் மகன் அருள் வயது 25, அதே பகுதியைச் சேர்ந்த வெள்ளபாண்டியின் மகன் தங்கதுரை (29) ஆகியோர் சரண் அடைந்துள்ளனர்

# நடிகர் சூர்யா பிறந்தநாளை முன்னிட்டு வண்டலூரில் மாபெரும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது

வண்டலூர், ஜூலை.15-

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைமை சூர்யா நற்பணி இயக்கம் சார்பில், நடிகர் சூர்யா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா, செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட வண்டலூர் ஊராட்சியில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் அயன் சூர்யா தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் தினகரன், பொருளாளர் ஆனந்த், பொறுப்பாளர் கணேஷ் மற்றும் மாவட்ட கவுரவத் தலைவர் சதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



சிறப்பு அழைப்பாளர்களாக ராஜசேகர் கற்பூர சுந்தரபாண்டியன், வழக்கறிஞர் எம்.எஸ். ஆரேம் மற்றும் அமைப்பாளர் ஜி.ஹரிராஜ், செயல் தலைவர் ஆரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். விழாவில் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், பிரஷர் குக்கர்கள் மற்றும் குடங்கள், பள்ளி மாணவ, மாணவியருக்கு பள்ளிப் பைகள் மற்றும் ஸ்டேஷனரி கிட்கள், தூய்மை பணியாளர்களுக்கு அரிசி மற்றும் கேடயங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு மிதிவண்டிகள், சலவைத் தொழிலாளர்களுக்கு இஸ்திரி பெட்டிகள், மேலும் பொதுமக்களுக்கு புடவை, வேஷ்டி மற்றும் சட்டைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட சூர்யா நற்பணி இயக்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் ஏராளமான ரசிகர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். "பிறந்தநாளை கொண்டாடுவது மட்டுமல்ல... பிறர் வாழ்க்கையில் மகிழ்ச்சியை விதைப்பதே உண்மையான கொண்டாட்டம்."அந்த எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில், நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு வண்டலூரில் நடைபெற்ற மாபெரும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா சமூக அக்கறையின் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.பெண்கள், மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், தூய்மை பணியாளர்கள் மற்றும் தொ ழிலாளர்கள் என பல்வேறு தரப்பினருக்கு அத்தியாவசிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு, நூற்றுக்கணக்கான குடும்பங்களின் முகத்தில் புன்னகை மலரச் செய்தது.சேவையே சிறந்த கொண்டாட்டம் என்பதை மீண்டும் ஒருமுறை உணர்த்திய இந்த நிகழ்வு, பொதுமக்களின் பாராட்டையும் ரசிகர்களின் வரவேற்பையும் பெற்றது.





# 600 ஆண்டுகள் பழமையான சிவகாமி அம்பாள் உடனுறை நடராஜர் கோவிலில் பாலாலய பிரதிஷ்டை முன்னேற்பாடு

## சிறப்பு பூஜையில் திரளான பக்தர்கள் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஜூலை.15-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் திருநீலகண்டர் தெருவில், 600 ஆண்டுகள் பழமையான சிவகாமி அம்பாள் உடனுறை நடராஜர் கோவில் உள்ளது. இங்கு, 600 ஆண்டுகள் பழமையான அரூர் தீர்த்தகிரீஸ்வரர் கோவில் காலத்திற்கு இணையான செப்பேடுகள் இக்கோவிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. பழைய கோவில் கட்டடத்தை அகற்றி, அதே இடத்தில் ஆகம விதிப்படி புதிய கோவில் கட்டும் திருப்பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. இதையொட்டி, பாலாலய பிரதிஷ்டை நடப்பதற்கான முன்னேற்பாடாக, நேற்று காலை முதல் மாலை வரை சிறப்பு பூஜை நடந்தது.தர்மபுரி குமாரசுவாமிப்பேட்டையைச் சேர்ந்த இந்துமதி சிவனடியார் தலைமையில், பிரதோஷ குழுவினர் திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியை நடத்தினர். தொடர்ந்து, திருவாசகப் பாடல்கள் பாடப்பட்டு, சிவபெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் நடந்தது. தொடர்ந்து, நடராஜருக்கு, சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டன. இதில், சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான சிவனடியார்களும், பக்தர்களும் பங்கேற்றனர்

# ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவமனை கட்டிடம் திறப்பு




தேனி பூதிப்புரம், ஜூலை.15-

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவக் கட்டிடங்களை திறந்து வைத்து, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பூதிப்புரம் பேரூராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் காணொளிக்காட்சி மூலம் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்விழாவை யொட்டி, பூதிப்புரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்கள். பின்னர், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று மருத்துவப் பரிசோதனை மையம், மருந்தகப் பிரிவு, ஆய்வகம் உள்ளிட்ட பல்வேறுப் பிரிவுகளை பார்வையிட்டதுடன், அங்கிருந்த பொதுமக்களிடம் சிகிச்சை வழங்கப்படும் விவரம் குறித்தும், கோரிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்தார். தொடர்ந்து, 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துப் பெட்டகங்களை வழங்கியதுடன், ஊட்டச்சத்து உணவுகளை முறையாக உட்கொண்டு ஒவ்வொருவரும் உடல் ஆரோக்கியத்துடன் இருந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். மேலும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் பதிவேடுகளைப் பார்வையிட்டு, அதிலுள்ள தொலைப்பேசி எண்ணிற்கு தொடர்புகொண்டு கர்ப்பிணிப் பெண்ணிடம், மருத்துவப் பரிசோதனைகளை முறையாக மேற்கொள்ளுமாறும்மருத்துவரின் ஆலோசனைப்படி ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.வரதராஜன், நிலைய மருத்துவ அலுவலர் மரு.தண்டபாணி, பேரூராட்சிமன்றத்தலைவர் கவியரசு. செயல் அலுவலர் ராஜேஷ் மற்றும் அரசு அலுவலர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வருவாய் கோட்டாட்சியர்
திருவள்ளூர் மாவட்டம்
ந.க.எண்.1265/2026/A7.
புஷ்பா
க/பெ.மோகன்
நெல்வாய் கிராமம்
ஊத்துக்கோட்டை TK
திருவள்ளூர் மாவட்டம்
மனுதாரர்
எதிர்
1.வருவாய் கோட்டாட்சியர்
திருவள்ளூர்
2.வருவாய் வட்டாட்சியர்
ஊத்துக்கோட்டை.
எதிர்மனுதாரர்
பொதுஅறிவிப்பு
மேற்கண்ட விலாசத்தில் நான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்னுடைய மகள் மஞ்சுளா த/பெ.மோகன் என்பவர் 10/05/1985 அன்று மேற்கண்ட விலாசத்தில் நெல்வாய் கிராமத்தில் பிறந்தார்.என் அறியாமை காரணமாக என் மகளின் பிறப்பை பதிவு செய்ய தவறி விட்டேன் எனவே எனது மகளின் பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்று வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கு யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் 15 நாட்களுக்குள் வட்டாட்சியருக்கோ அல்லது கோட்டாட்சியருக்கு தெரிவிக்கவும் இல்லையெனில் ஒருதலை பட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்
புஷ்பா
க/பெ.மோகன்
நெல்வாய்
9626699165.

# நீலகிரியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணிகுன்னூர் துணை காவல் கண்காணிப்பாளர் துவக்கி வைத்தார்

நீலகிரி, ஜூலை.15-

நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பு (ND-SLF) சார்பில், போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி.

குன்னூரில் நடைபெற்றது.குன்னூர் ப்ளு ஹில்ஸ் பகுதியில் இருந்து தொடங்கிய இந்த விழிப்புணர்வுப் பேரணியை, குன்னூர் டிஎஸ்பி ரவி கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்தப் பேரணியானது குன்னூர் தீயணைப்பு நிலையம் வரை நடைபெற்றது. குன்னூர் அரசு கலைக் கல்லூரி பாலச்சந்தர் பேராசிரியர் ஆங்கிலத்துறை அனைவரையும் வரவேற்றார்

இந்த நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் தலைவர் சுரேஷ் ரமணா, மாவட்ட செயலாளர் கண்டோன்மெண்ட் வினோத் குமார், எண்ணங்களின் சங்கமம் மாநில ஒருங்கிணைப்பாளர் உஷா பிராங்கிளின், உதகை ஒருங்கிணைப்பாளர் ஜாபர், கூடலூர் ஒருங்கிணைப்பாளர் லாரன்ஸ் மற்றும் குன்னூர் ஒருங்கிணைப்பாளர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த






சமூக ஆர்வலர்கள், தலைவர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் குன்னூர் அரசினர் கலைக்கல்லூரி மாணவ மாணவிகள் திரளாகக் கலந்துகொண்டனர். பங்கேற்பாளர்கள் போதைப்பொருட்களுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பினர். சிறப்பாக பொம்மைகள் மூலமாக கல்லூரி மாணவர்கள் போதை இல்லாத நீலகிரியை உருவாக்கும் என்று அலங்கார உருவ பொம்மைகளுடன் பொதுமக்களிடம் நடனமாடி விழிப்புணர் ஏற்படுத்தியது சிறப்பு வாய்ந்தது அமைந்தது இந்த நிகழ்ச்சியில் பேசிய துணைக் காவல் கண்காணிப்பாளர் ரவி தமிழக அரசு போதை ஒழிப்பு தொடர்பாகப் பிரத்யேகமாக அறிமுகப்படுத்தியுள்ள செயலியைப் (App) பற்றி மாணவர்களுக்கு விளக்கினார். போதை தொடர்பான புகார்களை இந்தச் செயலி மூலம் தைரியமாகத் தெரிவிக்கலாம் என்று அவர் அறிவுறுத்தினார். மேலும், "போதை இல்லா தமிழகத்தையும், முதன்மையாகப் போதை இல்லா நீலகிரியையும் உருவாக்குவோம்" என மாணவ மாணவிகளுக்கும், தன்னார்வலர்களுக்கும் உறுதிமொழி ஏற்பு செய்தார்.

போதை விழிப்புணர்வு: முக்கிய செய்திகள் போதைப்பொருள் ஒழிப்பு என்பது வெறும் அரசு சார்ந்த நடவடிக்கை மட்டுமல்ல, அது ஒவ்வொரு குடிமகனின் சமூகப் பொறுப்பாகும். இது குறித்துப் பொதுமக்களுக்கான சில முக்கிய செய்திகள்: போதைப்பொருள் பயன்பாடு தனிநபர் ஆரோக்கியத்தை மட்டுமின்றி, ஒரு குடும்பத்தையே பொருளாதார ரீதியாகவும், மன ரீதியாகவும் நிலைகுலையச் செய்கிறது. குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தை இது முற்றிலும் சிதைக்கிறது. சட்ட ரீதியான விழிப்புணர்வு போதைப்பொருள் விற்பனை அல்லது பயன்பாடு குறித்து அறிந்தால், உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்திற்கோ அல்லது அரசு வழங்கியுள்ள உதவி எண்களுக்கோ/ செயலிகள் மூலமாகவோ தகவல் தெரிவிக்க வேண்டும். தகவல் தெரிவிப்பவர்களின் விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும். கல்வி நிலையங்களில் விழிப்புணர்வு: கல்லூரிகளும், பள்ளிகளும் போதைப்பொருட்கள் ஊடுருவாத மண்டலங்களாக இருக்க வேண்டும். மாணவர்களிடையே போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைப் பல்வேறு கலை மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது அவசியம். நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பு போன்ற அமைப்புகள் செய்வது போல, ஒவ்வொரு பகுதியிலும் உள்ள இளைஞர்கள் ஒன்றிணைந்து போதைக்கு எதிரான பரப்புரைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.கூட்டு முயற்சி: "போதை இல்லா வாழ்வே சிறந்த வாழ்வு" என்ற முழக்கத்திற்கேற்ப, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதும், அவர்களுடன் நெருக்கமாக இருப்பதும் போதைப் பழக்கத்தைத் தடுக்க உதவும் சிறந்த வழிமுறையாகும்.

நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பு தலைவர் சுரேஷ் ரமணா நீலகிரி மாவட்டத்தை போதை இல்லா மாவட்டமாக மாற்ற வேண்டும் என்ற லட்சியத்துடன் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேரணி, பொதுமக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அனைவருக்கும் நன்றி கூறினார்



■ பெருந்தலைவர் அய்யா க.காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு, வாணியம்பாடி பெருமாள்பேட்டையில் உள்ள கருணை இல்லத்தில் சிறப்பாக கொண்டாடினோம்.இந்த நிகழ்வில் 350 பேருக்கு அசைவ மதிய உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. மேலும், பள்ளி மாணவர்களுக்கு தேவையான நோட்டுப் புத்தகங்கள், பென்சில்கள், பேனாக்கள், ஷாம்பு, பாராசூட் முடி எண்ணெய், சோப்பு உள்ளிட்ட அடிப்படை அத்தியாவசிய பொருட்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு தமிழக வெற்றிக் கழகம் (TVK), கூத்தண்டாகுப்பம் சார்பில் திரு. சரவணப்பெருமாள்.டி ஆதரவளித்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்."கல்வியே உயர்வு" என்ற அய்யா காமராஜர் அவர்களின் உயரிய எண்ணத்தைப் போற்றும் வகையில் இந்த சமூகப் பணியை மேற்கொண்டோம்

# பழனிக்கு வரும் பக்தர்களை வருவாய் ஈட்டும் கருவியாக பார்க்காதீர்கள்

## விடுதி கட்டணங்களை குறைக்க டிடிவி தினகரன் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.15-

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தங்கும் விடுதிகளின் அறைக் கட்டணங்கள் நேற்று (ஜூலை 13) முதல் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளன. சுமார் 15 ஆண்டுகளுக்குப் பிறகு நிர்வாகம் மற்றும் பராமரிப்புச் செலவுகளைக் காரணம் காட்டி இந்த கட்டண உயர்வு அமல்படுத்தப்பட்டுள்ளது

இந்நிலையில் இந்த கட்டண உயர்வை திரும்ப பெற வேண்டும் என அமமுகவின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தி உள்ளார். இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர் தமிழகத்தின் முக்கிய ஆன்மீகத் தலங்களில் ஒன்றாக திகழும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள விடுதிகளின் கட்டணம் 600 ரூபாய் முதல் 2500 ரூபாய் வரை உயர்த்தப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.தொலைதூரங்களில் இருந்து பழனி முருகனை தரிசிக்க வரும் ஏழை, எளிய, நடுத்தர குடும்பத்தினர் குறைந்த செலவிலும், பாதுகாப்பாக தங்குவதற்காகவும், கோயில் நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்ட விடுதிகளின் கட்டணத்தை தனியார் விடுதிகளுக்கு இணையாக திடீரென பெருமளவு உயர்த்தப்பட்டிருப்பது அவ்விடுதிகள் கட்டப்பட்ட அடிப்படை நோக்கத்தையே அடியோடு சிதைக்கும் வகையில் உள்ளது.எனவே, பழனி கோயிலுக்கு வரும் பக்தர்களை வருவாய் ஈட்டும் கருவியாக பார்க்காமல், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள விடுதி கட்டணங்களின் உயர்வை உடனடியாக திரும்ப பெறுவதோடு, பக்தர்களுக்கு சிரமத்தை உண்டாக்கும் எத்தகைய முடிவுகளையும் இதுபோன்று அவசரகதியில் எடுக்கக் கூடாது என இந்து சமய அறநிலையத்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துவதாக குறிப்பிட்டு உள்ளார்

# சிங்கப்பெண் படை என்பதெல்லாம் ஒரு ஷோதான்; மக்களுக்கு அதனால் எந்த நன்மையும் இல்லை: எடப்பாடி பழனிசாமி

சேலம், ஜூலை.15-

சிங்கப்பெண் படை என்பதெல்லாம் ஒரு ஷோதான்; மக்களுக்கு அதனால் எந்த நன்மையும் இல்லை என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார். பேசுகிறேன் என்ற பெயரில் முதலமைச்சர் விஜய் பஞ்ச் டயலாக்தான் கூறிக் கொண்டிருக்கிறார். நாலாந்தர பேச்சாளர் போல விஜய்யின் கரூர் பேச்சு இருந்தது; வெறும் பஞ்ச் டயலாக் மட்டும்தான்

# காவேரிப்பட்டினத்தில் நகர்புற பசுமையாக்கம் திட்டம்: தென்பெண்ணை ஆற்றங்கரையில் 300க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடவு

கிருஷ்ணகிரி, ஜூலை.15-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பேரூராட்சியில், நகர்புற பசுமையாக்கம் திட்டத்தின் கீழ் தென்பெண்ணை ஆற்றங்கரையை பசுமையாக்கும் நோக்கில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. காவேரிப்பட்டினம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் அருகே நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு திட்டத்தை தொடங்கி வைத்தார். இதில் பேரூராட்சி தலைமை



எழுத்தர் வெங்கடாசலம், திமுக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணைத் தலைவர் செந்தில்குமார் உள்ளிட்ட பேரூராட்சி நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் பலர் பங்கேற்றனர்.ஆஞ்சநேயர் கோயில் அருகே உள்ள கால்வாய்கள் மற்றும் ஆற்றங்கரையில் சிலர் தொடர்ந்து குப்பைகளை கொட்டி வந்ததால் அப்பகுதி குப்பைமேடாக மாறியதுடன், மழைக்காலங்களில் அந்தக் குப்பைகள் தென்பெண்ணை ஆற்றில் கலந்து நீர் மாசுபடுவதாக பொதுமக்கள் தொடர்ந்து புகார் அளித்திருந்தனர். இதையடுத்து, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பேரூராட்சி நிர்வாகம் உடனடி நடவடிக்கை மேற்கொண்டது. குப்பைகள் அகற்றப்பட்டு, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் நகர்புற பசுமையாக்கம் திட்டத்தின் கீழ் 300க்கும் மேற்பட்ட அரசமரம், தென்னை, வேங்கை, பலா, வேப்பம், புங்கை, மூங்கில் உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.மேலும், நடப்பட்டுள்ள அனைத்து மரக்கன்றுகளுக்கும் தினமும் தண்ணீர் ஊற்றி முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாக பேரூராட்சி ஊழியர்கள் தெரிவித்தனர். இந்த நடவடிக்கையால் ஆற்றங்கரை பசுமை சூழலாக மாறுவதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர் மாசுபாடு கட்டுப்பாடு மற்றும் பொதுமக்களுக்கு தூய்மையான சூழல் உருவாகும் என பேரூராட்சி நிர்வாகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# புதுத்தாமரைப்பட்டி திருவாதவூர் பாசன வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி விவசாயி செல்வம் மனு

மதுரை, ஜூலை.15-

மதுரை கிழக்கு வட்டம், புதுத்தாமரைப்பட்டி முதல் திருவாதவூர் வரையிலான பாசன வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி, மதுரை மாவட்ட நஞ்சை புஞ்சை விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் செல்வம் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்திருந்தார். விவசாயிகள் குறைதீர்க்கும் நாளில் அளிக்கப்பட்ட இந்த மனுவின் (மனு எண்: TN/WRD/MDU/P/COLLAGRI/27NOV24/10561378) மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீர்வளத்துறைக்கு உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பெரியாறு பிரதான கால்வாய் கோட்டத்தின் உதவி செயற்பொறியாளர் தலைமையிலான குழுவினர், கொடிக்களம் மிமி பிட் மற்றும் புதுத்தாமரைப்பட்டி பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டனர்.இந்த ஆய்வின் போது, பாசன வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, அந்த இடங்கள் முறையாக அளவீடு செய்யப்பட்டன. மேலும், ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்கான எல்லைகளும் (அத்துமால்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.அடுத்தகட்ட நடவடிக்கையாக, **2007ம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டத்தின்படி**, ஆக்கிரமிப்பாளர்களுக்கு 'படிவம் மி' (Form I) நோட்டீஸ் வழங்குமாறு மதுரை கிழக்கு வட்டாட்சியருக்கு நீர்வளத்துறை சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது. வட்டாட்சியரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டவுடன், வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்படும் என்று அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி செல்வம் எடுத்த இந்த முயற்சிக்கு, அப்பகுதி விவசாயிகள் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.



# மதுரையில் ஜோய்ஆலுக்காஸ் பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ தொடக்கம்

## ஜூலை 26 வரை நடைபெறும் கண்காட்சி; புதிய வடிவமைப்பு வைர நகைகள் அறிமுகம்

மதுரை, ஜூலை.15=

மதுரை நேதாஜி ரோட்டில் அமைந்துள்ள ஜோய்ஆலுக்காஸ் ஷோரூமில், 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ' வெள்ளிக்கிழமை தொடங்கியது. இந்த சிறப்பு கண்காட்சி ஜூலை 10 முதல் 26ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

கண்காட்சியில், பெண்களின் ரசனைக்கு ஏற்ப பிரத்யேக வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட புதிய வைர நகைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. திருமணம், நிச்சயதார்த்தம், விழாக்காலங்கள் மற்றும் அன்றாட பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் நவீன மற்றும் நேர்த்தியான வடிவமைப்புகளுடன் கூடிய நகைகள் இடம்பெற்றுள்ளன.இந்தக் கண்காட்சியில் வாடிக்கையாளர்களுக்காக சிறப்பு சலுகைகள் மற்றும் கவர்ச்சிகரமான ஆஃபர்களும் வழங்கப்படுகின்றன. மே லும், வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வைர நகைகளை தேர்வு செய்யும் வசதிகளும் செய்யப் பட்டுள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.ஜூலை 26 வரை நடைபெறும் இந்த பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோவை பொதுமக்கள் பார்வையிட்டு, சிறப்பு சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஜோய்ஆலுக்காஸ் நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.



# மதுரையில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 நவீன மருத்துவக் கட்டடங்கள் திறப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் , சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நடைபெற்ற விழாவில், தமிழகம் முழுவதும் ரூ.139.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன மருத்துவக் கட்டடங்களைக் காணொளிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். இதன் தொடர்ச்சியாக, மதுரை மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில், தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் மூலம் 15வது நிதிக் குழு மானிய நிதியிலிருந்து, மொத்தம் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 நவீன மருத்துவக் கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைக்கப்பட்டன. மதுரை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட புதிய மருத்துவக் கட்டடங்களின் விவரம்:செல்லம்பட்டி (உசிலம்பட்டி தொகுதி): அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டிலான வட்டார பொது சுகாதார அலகு கட்டடம். தொட்டப்பநாயக்கனூர் (உசிலம்பட்டி தொகுதி): அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டிலான வட்டார பொது சுகாதார அலகு கட்டடம்.கீழவளவு (மேலூர் தொகுதி): அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலான புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம். கிடாரிபட்டி ஊராட்சி (மேலூர் தொகுதி): ரூ.45 இலட்சம் மதிப்பீட்டிலான அரசு துணை சுகாதார நிலைய கட்டடம். தமிழ்நாடு முதலமைச்சர் இக்கட்டடங்களைக் காணொளிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து, உசிலம்பட்டி வட்டம், செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணாஉசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ம. விஜய் மற்றும் உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டு புதிய வட்டார பொது சுகாதார அலகு கட்டடங்களைப் பார்வையிட்டு, குத்துவிளக்கேற்றி, பயனாளிகளுக்குத் தாய் சேய் நலப் பெட்டகங்களை வழங்கினர்.இந்நிகழ்வின் போது, மாவட்டச் சுகாதார அலுவலர் மருத்துவர் பொற்செல்வன், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# சொத்து விவரங்களை காட்டத் தயார்: அமைச்சர் நிர்மல் குமாருக்கு திமுக மாமன்ற உறுப்பினர்கள் சவால்



மதுரை, ஜூலை.15-

மதுரை மாநகராட்சியில் ஊழல் நடந்ததாகக் கூறப்படும் புகார்கள் மற்றும் சொத்து விவரங்களை வெளியிடுவது தொடர்பாக, அமைச்சர் நிர்மல் குமாருக்கு திமுக மாமன்ற உறுப்பினர்கள் பகிரங்க சவால் விடுத்துள்ளனர். இது குறித்து மதுரை மாநகராட்சி திமுக மாமன்ற உறுப்பினர் தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது:**200 கோடி ஊழல் புகார் பொய்யானது:**மதுரை மாநகராட்சியில் கடந்த சில மாதங்களாக சொத்து வரி விதிப்பில் **200 கோடி ரூபாய் ஊழல்** நடந்ததாக திட்டமிட்டு அவதூறு பரப்பப்பட்டது. ஆனால், இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் காவல்துறை சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், 200 கோடி ஊழல் என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில், சுமார் **1.80 கோடி ரூபாய் அளவில் மட்டுமே** முறைகேடுகள் கண்டறியப்பட்டன. அதில் 80 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுவிட்ட நிலையில், மீதமுள்ள 60 லட்சம் ரூபாய் முறைகேட்டில் தொடர்புடையவர்கள் மீது மாநகராட்சி ஏற்கனவே நடவடிக்கை எடுத்து பணிநீக்கம் செய்துள்ளது.**அமைச்சர் மீது ஊழல் புகார்:**சட்டத்துறை அமைச்சராக உள்ள நிர்மல் குமார் மீது விழுப்புரத்தில் **அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் 200 கோடி ரூபாய் ஊழல்** செய்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பதவியேற்ற இரண்டு மாதங்களிலேயே இவ்வளவு பெரிய ஊழல் புகாரில் அவர் சிக்கியுள்ளார். மேலும், அவர் தனது சமூக வலைதளப் பக்கங்களில் செய்யாத சாலைப் பணிகளைச் செய்ததாகப் பதிவிட்டு, பின்னர் ஆதாரங்களுடன் கேள்வி எழுப்பப்பட்டதும் அந்தப் பதிவுகளை நீக்கியுள்ளார்.

**சொத்து விவரம் குறித்த சவால்:**மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டும் என்று அமைச்சர் நிர்மல் குமார் கூறி வருகிறார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், **திமுகவைச் சேர்ந்த 65 மாமன்ற உறுப்பினர்களும் ஜூலை 14ஆம் தேதி தங்கள் சொத்து விவரங்களைத் தாக்கல் செய்யத் தயாராக உள்ளனர்**. இதேபோல் அமைச்சரும் தனது சொத்து விவரங்களை வெளியிடத் தயாராக இருக்கிறாரா? என்று திமுக உறுப்பினர் சவால் விடுத்துள்ளார்.**கூட்டணி கட்சி மீதான விமர்சனம்:**

எட்டு ஆண்டுகளாக அமைதி காத்த நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன், தற்போது ஊழல் குறித்துப் பேசுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது. அவர் தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்ள பாஜகவை நோக்கி நகரப் பார்க்கிறாரா என்ற சந்தேகம் எழுகிறது.

**மக்கள் பிரச்சினைகள் புறக்கணிப்பு:**மதுரை வெள்ளக்கல் குப்பைக் கிடங்கு தீப்பற்றி எரிவதால் மக்கள் புற்றுநோய் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். அந்தத் தொகுதியைச் சேர்ந்த அமைச்சரான நிர்மல் குமார் இதுவரை அங்குச் சென்று மக்களைச் சந்திக்கவில்லை. மேலும், மாநகராட்சி அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்களின் தொலைபேசி அழைப்புகளை ஏற்று பதில் அளிப்பதில்லை என்றும், மக்கள் பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்துவதில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை, மக்கள் குடும்ப நலத்துறை, மாவட்ட சுகாதார பணிகள் சார்பாக, உலக மக்கள் தொகை தினத்தை (ஜூலை 11) முன்னிட்டு, ஜீவா நர்சிங் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் கலந்துகொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (14.07.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, ஓசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) முருகேசன், (வளர்ச்சி)ராமஜெயம், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், இணை இயக்குநர் (நலப் பணிகள்) மரு.மோகனபானு, துணை இயக்குநர் (குடும்பநலம்) மரு.பாரதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ மதுரை கிழக்கு வட்டம் தாலுகா அலுவலகத்தில் வட்ட அளவிலான மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம் கிழக்கு வட்டாட்சியர் தாமோதரன் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமையிடத்து மண்டல துணை வட்டாட்சியர் பாண்டியராஜன் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# அண்ணா பல்கலைக்கழகத்தில் வேலை வாங்கித் தருவதாக மோசடி 5 பேர் கைது

சென்னை, ஜூலை.15-

அண்ணா பல்கலைக்கழகத்தில் வேலை வாங்கித் தருவதாக மோசடி செய்த வழக்கில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அண்ணா பல்கலைக்கழக ஊழியர் உட்பட 5 பேரை கைது செய்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். Rail Freight தனியார் ஆன்லைன் டெலிவரி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த 2 இளைஞர்களிடம் அண்ணா பல்கலைக்கழகத்தில் வேலை வாங்கித் தருவதாக கூறி, அங்கு அலுவலக உதவியாளராக பணியாற்றி வந்த சசிகுமார் உள்ளிட்டோர் ரூ.18 லட்சம் பெற்று மோசடி செய்ததாக புகார் எழுந்துள்ளது. இந்த புகாரின் அடிப்படையில், சசிகுமார் உட்பட 5 பேரை கோட்டூர்புரம் போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.படித்து முடித்து வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களைக் குறிவைத்து இதுபோன்ற பல்வேறு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக நடைபெற்ற இந்த மோசடியில், தனியார் ஆன்லைன் டெலிவரி நிறுவனத்தைச் சேர்ந்த 2 இளைஞர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளார்களா அல்லது வேறு யாரேனும் இவர்களிடம் சிக்கி ஏமாந்துள்ளனரா என்ற கோணத்திலும், இந்த மோசடிப் பின்னணியில் வேறு நபர்களுக்குத் தொடர்புள்ளதா என்பது குறித்தும் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் 47வது மாமன்றக்கூட்டம் மேயர் (பொ) / துணை மேயர் திரு.தி.நாகராஜன் தலைமையில் நடைபெற்றது. அருகில் ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., , சட்டமன்ற உறுப்பினர்கள் (மதுரை கிழக்கு தொகுதி) சோ.கார்த்திகேயன் , (மதுரை மத்திய தொகுதி)மதார்பதூருதின் , (மதுரை தெற்கு தொகுதி) எம்.எம்.கோபிசன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# சென்னை மாதவரம் அருகே தனியார் குடோனில் பெரும் தீ விபத்து

சென்னை, ஜூலை.15-

சென்னை மாதவரம் தபால்பெட்டி அருகே தனியார் குடோனில் தீ விபத்து ஏ ற்பட்டுள்ளது. கரும்புகை வெளியேறியதால் பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சென்னை மாதவரம் பால் பண்ணை தபால் பெட்டி அருகே உள்ள நான்குக்கும் மேற்பட்ட தனியார் நிறுவன கிடங்குகளில் (குடோன்) பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பாத்திரங்கள் தயாரிப்பதற்கான பிளாஸ்டிக் மூலப்பொருட்களும் அட்டைப்பெட்டிகளும் குடோன்களில் அதிகளவில் சேமித்து வைக்கப்பட்டிருந்ததால், தீ மளமளவெனப் பரவி அணைக்க முடியாத அளவிற்குத் தீவிரமாக எரிந்து வருகிறது.தீயின் தாக்கம் காரணமாக, அருகிலிருந்த அடுத்தடுத்த நான்கு கிடங்குகளுக்கும் (குடோன்) தீ மளமளவெனப் பரவி பெரும் விபத்தாக மாறியது. இச்சம்பவம் குறித்து அப்பகுதி மக்கள் உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்தனர். அதன் அடிப்படையில், மணலி, மாதவரம், செம்பியம் ஆகிய நிலையங்களில் இருந்து வந்த 50க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்தில் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் தீவிரமாக இறங்கினர்.கிடங்குகளில் தீ தீவிரமாக எரிந்து வருவதால், அப்பகுதி முழுவதும் அடர்ந்த கரும்புகை மண்டலமாக மாறியுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல் போன்ற உடல்நலப் பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. இந்த விபத்து குறித்துக் காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161